2013 மே 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 385, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

385—

நியாய விலைக் கடை

***7255—திரு. க. தினகரன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூர் ஒன்றியம், வாகராயம்பாளையத்தில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் ஒன்றியத்தில் உள்ள வாகராயம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும் வாகராயம்பாளையம் நியாய விலைக் கடையில் 1,168 குடும்ப அட்டைகள் உள்ளன. தற்பொழுது வாகராயம்பாளையத்திலிருந்து 1.5 கி.மீ. தொலைவிலுள்ள காந்திகடை பகுதியில் 510 குடும்ப அட்டைகளுடன் புதிய முழுநேர நியாய விலைக் கடை தொடங்க மாவட்ட ஆட்சியருக்கு 27—2—2013 அன்று முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் உணவுப் பொருள் வழங்கல் ஆணையரின் அனுமதி பெற்று, விரைவில் அந்தக் கடை திறக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.*

திரு. க. தினகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூலூர் தொகுதிக்குட்பட்ட சூலூர் ஒன்றியம், மூப்புவளையம் பேரூராட்சியில், வாகராயம்பாளையம் கிராமத்தில் ஏற்கெனவே 1,168 கார்டுகளுடன் நியாய விலைக் கடை இயங்கி வருகிறது. அங்கு இருக்கும் மக்கள் காந்திகடை வீதியிலிருந்து 2 கி.மீ. தூரம் போகவேண்டியிருக்கிறது. ஆகவே, மக்களுடைய நலனைக் கருதி உடனடியாக அந்தப் பகுதியில் முழுநேர நியாய விலைக் கடையை இந்த ஆண்டிலேயே கட்டிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அங்கே வாகராயம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்படுகின்ற 2 கடைகள் இருக்கின்றன. மூன்றாவது பகுதி நேரக் கடை என்று வரும்பொழுது, அதை பகுதி நேரக் கடையாகத் திறக்க முடியாது. சட்ட விதிகளின்படி அதை முழு நேர நியாய விலைக் கடையாகத்தான் திறக்க முடியும். எனவேதான், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை சிறப்பு இனமாகக் கருதி, துறை ரீதியாக பரிசீலித்து, மக்கள் கஷ்டப்படக்கூடாது என்று அம்மா அவர்கள் எண்ணுவதால், அவர்களின் ஆணையை ஏற்று, இப்பொழுது 510 கார்டுகள் உள்ள அப்பகுதியில் முழு நேரக் கடையைத் திறப்பதற்கு அம்மாவின் அரசு முன்வந்திருக்கிறது என்பதையும், அதை விரைவாகத் திறப்பதற்கு துறை ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.*

திரு. க. தினகரன்: *இந்தப் பகுதியில் இருக்கின்ற 1,168 கார்டுகளைப் பிரித்து, 510 கார்டுகளைக் கொண்டு ஒரு முழு நேரக் கடையை மூப்புவளையம் பேரூராட்சி, வாகராயம்பாளையத்தில் காந்தி கடைவீதி பகுதியில், அமைத்துக்கொடுக்க முன்வந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.*